கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

ஐப்பசி மாத இதழ்
NEWS BULLETIN
OCTOBER 2020
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/20 (முதல்)	புதிய தவணைக்கான தமிழ்ப்பாட, கலைப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. President Kennedy பாடசாலை வாடகைக்குக் கிடைத்ததும், அங்கு வகுப்புகள் தொடரும். புதிய வகுப்புக்கான விண்ணப்பப் படிவங்கள், தமிழ்ப்பாடப் புத்தகங்கள் தேவையானோர் தலைமை ஆசிரியையுடன், அல்லது திருமதி பொன்மணியுடன் தொடர்பு கொள்ளலாம். உங்கள் ஒவ்வொருவருக்கும், Zoom இணையத்தள அடையாள தொடர்பு விபரம் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படும். சென்ற தவணை தமிழ் வகுப்புகள் இலவசமாக இடம்பெற்றன. இந்தத் தவணை, ஆசிரிய வேதனத்துக்காக ஒரு தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது. கலைப்பாட ஆசிரியர்களின் தொடர்புகளுக்கு கர்நாடக சங்கீதம் திரு.தீனதயாளன் 07886969194 திருமதி.வானதி 07523431759 பரதநாட்டியம் திருமதி சத்தியகௌரி 07773591591 திருமதி அஜந்தா 07425577697 மிருதங்கம் - செல்வன்.தனுஜன் 07582418364 வீணை - செல்வி.சாத்விகா 07556130208 மேலும் தகவல்களைப் பெற்றுக்ககொள்ள திருமதி பொன்மணி 07436542925 அவர்களைத் தொடர்பு கொள்ளவும். கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகம், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்.

பேச்சுப்போட்டி

தமிழ் ஆர்வலர் குழு நடாத்திய தேசிய அளவிலான தமிழ்ப் பாடசாலைகளுக்கு இடையிலான பேச்சுப் போட்டியின் முதற்கட்டமான மேற்கு மண்டல தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின், தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் சார்பில் போட்டியிட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

1. தருண் வசந்தகுமார்
2. லக்ஷன் திருவரங்கன்
3. ஈஸ்வர் சாய்ஸ்ரீராம் வெங்கடேஷ் பெருமாள்
4. அருஷ்னி விஜயரூபன்
5. அனன்யா மயூரன்
6. தருண்யா பகீரதன்
7. லக்ஷனா பிரகல்யா விக்னேஷ்
8. ஆஷா கோபிஹரன்
9. மாதுர்யா பாகிஸ்வரன்
10. தனிஷ்கா ஜெயமோகன்
11. மோனிஷ் ஜெய்கணேஷ்
12. ஈஷாபூர்ணிக்கா வெங்கடேஷ் பெருமாள்

நடுவர்களின் தீர்ப்பினடிப்படையில், முதற்சுற்றில் செல்வி ஈஷாபூர்ணிக்கா வெங்கடேஷ் பெருமாள் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கும், போட்டியில் பங்குபற்றிய ஏனைய மாணவர்களுக்கும், அவர்களை ஊக்குவித்துத் தயார்ப்படுத்திய ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மனமாரத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேச்சுப்போட்டியின் இறுதிச்சுற்றுக்கான தலைப்புகள் பின் வருமாறு:

வயது:-5-7 நேரம்:-2 நிமிடங்கள்
தலைப்பு:-எனக்குப் பிடித்த பண்டிகை.
வயது:- 8-10 நேரம்:-3-4 நிமிடங்கள்
தலைப்பு:- நான் தலைவரானால்.
வயது:- 11-12 நேரம்:- 4-5 நிமிடங்கள்
தலைப்பு:- தமிழர் வாழ்வும் வளமும்.

இறுதிச்சுற்றில் பங்குபற்றும் செல்வி ஈஷா பூர்ணிக்கா வெங்கடேஷ் பெருமாள் அவர்களுக்கு முன்கூட்டிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்மொழியின் அங்கீகாரமும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான பிரித்தானியாவின் தடைக்கு எதிராக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் கடந்த 2018 காலப்பகுதியில் பிரித்தானியாவின் உள்துறைச் செயலாளர் சஜித் ஜாவித் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதற்கு எதிராகத் தடை செய்யப்பட்ட அமைப்புகள் தொடர்பான சிறப்பு ஆணையத்தில், தடையை நீக்கக்கோரி மேல்முறையீட்டு வழக்கைத்

தொடுத்திருந்தது. அந்த வழக்கினை விசாரித்த ஆணையம், தமிழீழ விடுதலைப் புலிகள் இப்போது பயங்கரவாத நடவடிக்கைகளோடு தொடர்புடையவர்கள் என நம்புவதற்கான நியாயமான காரணங்கள் எதுவும் இல்லையென்பதை அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் மீதான இங்கிலாந்தின் தடை தவறானது என 21/10/2020 அன்று தீர்ப்பளிருந்ததை அனைவரும் அறிந்ததே.

ஆனால் பிரித்தானிய அரசாங்கம் இன்னும் அவர்கள் மீதான தடையை நீக்கவில்லை. சட்ட வல்லுநர்களின் கருத்தினடிப்படையில், ஒன்று, உள்துறை அமைச்சரின் முடிவு தவறு என்று அதை மீள்பரிசீலனை செய்யலாம். அல்லது விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கலாம்.

அதுவரை தமிழ் மக்கள் பல்வேறு வகையில் அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம், பிரித்தானிய அரசாங்கம் தடையை நீக்க வழிகோல வேண்டுமன்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பிரித்தானியாவில் தழிழ்மொழியைப் பிரித்தானியப் பாடத்திட்ட அலகுகளுக்குள் கொண்டு வருவதற்கு, இங்கேயுள்ள அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளும் ஒற்றுமையோடு, எமது இருப்பையும், மொழி ஆர்வத்தையும் காட்டுவதன் மூலம் சாதிக்க முடியும். ஒன்றுபடு தமிழினமே வென்றிடுவோம்!

முத்தமிழ் வளர்த்த முன்னோர்களே

புலம்பெயர்ந்த தமிழ் முன்னோர்களே!
சிந்தனையில் தமிழ்ப்பற்று எழுந்ததுவோ!
சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தீர்களே!
சமூகம் இணைத்து முத்தமிழ் காத்தீர்களே!

தமிழ்ப்பள்ளிகளாரம்பித்த புண்ணியர்களே!
நல்ஆசான்கள் அமைத்த தமிழார்வலர்களே!
ஆர்வமாய் அரும்பணியாற்றினீர்களே!
உங்களை வாழ்த்தி நன்றி நவில்கின்றோம்!

உங்கள் நீண்டகாலச்சேவைகள் நிலைத்தனவே
கண்ணியமாய்க் கடமைகள் புரிந்தீர்களே!
இன்னல்களைச் சகித்துநின்று வென்றீர்களே
எதிர்காலச் சந்ததி தமிழ் பயின்றிடவே!

இளைய தலைமுறையில் தமிழ் மலர்கிறதே!
பூக்களோடு நார்களும் நறுமணம் வீசுகிறதே
முன்னோர்களின் கனவு இன்று பலிக்கிறதே!
ஒன்றுபட்டுக் கைகளைக் கோர்த்திடுவோமே

தமிழை உயிரென மதித்த மானத் தமிழினமே
தலைவன் காட்டிய முத்தமிழ்ப் பாதையிலே
தவறாது பயணித்து முன் செல்வோமே
தமிழர் முகவரியாய் முத்தமிழ் திகழட்டுமே

தமிழுக்கென நல் அங்கீகாரம் கிடைத்திடவே
தமிழ் பயிலும் மாணவர்கள் பயன்பெற்றிட
தகுந்த வழிகளைச் சான்றோர் கையாண்டிட
தமிழர்நாம் திரண்டு குரல் எழுப்புவோம்

நன்றி!

திருமதி கி. அனற்செபமலர்
தமிழாசிரியை.

அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்ததே குடும்பம்



அன்பினால் அத்திவாரமிட்டுப் பாசத்தினால் சுவரமைத்துப் பண்பினால் கூரை வேயப்பட்ட ஒரு கோயிலே குடும்பம். இங்கே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள். பெற்றோரிடம் இருந்தும், உற்றோரிடம் இருந்தும், நிறையப் படிப்பதால் இது ஒரு பல்கலைக்கழகம். பத்துமாதம் கருவிலே சுமந்து பக்குவமாய் வளர்க்கும் அன்னையும், பாசத்தோடு தன் தோளிற் சுமந்து, கேட்டதெல்லாம் வாங்கித்தரும் தந்தையும், சின்னச் சின்ன சண்டைகள் பிடித்தாலும் செல்லமாய் விளையாடும் அண்ணா அக்காவும், தனக்கே முதல் வேண்டுமென்று அடம்பிடிக்கும் தம்பி தங்கையும் என மகிழ்ச்சி நிறைந்ததே குடும்பம்.

ஒரு குடும்பத்திலேயே நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கின்றோம். உற்றார் உறவினரோடு உண்டு மகிழ்கின்றோம். ஊர்த்திருவிழாவில் ஒன்று கூடுகின்றோம்

பழ மரங்களை நாடிவரும் பறவைகளைப் போல, பல உறவுகள் தேடிவருவதும், விழாக்கள், விருந்தோம்பல் என வலிகளை மறந்து, வலிமை பெறுவதும் இங்கேதான். அன்பு நிறைந்த இக்குடும்பத்தில் ஒற்றுமையாய் வாழ்வோம். எல்லோருக்கும் பெருமை சேர்ப்போம்.

நன்றி!

செல்வி தருண்யா பகீரதன்
தரம் 1

ஹலோவீன்

வணக்கம் எனக்கு மிகவும் பிடித்த விழாவைப்பற்றி நான் அறிந்ததையும், நான் கொண்டாடும் விதத்தையும் பற்றி உங்கள் அனைவரிடமும் பகிர்வதில் மிகவும் மகிழ்ச்சி. ஹலோவீன் குழந்தைகளின் மனம் கவரும் திருவிழா. ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில மாதம் அக்டோபர் 31ம் நாள் கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் பயந்தவர்கள் என்ற எண்ணம் அனைவருக்கும் உண்டு. ஆனால் குழந்தைகளாகிய நாங்கள் மற்றவர்களைப் பயமுறுத்தி விளையாட அதுவும் பேயாக, எலும்புகூடுகளாக மாறுவேடமிட்டுப் பெரியவர்களை பயமுறுத்துவது எத்தனை மகிழ்ச்சியான ஒரு தருணம்.



இப்படிப்பட்ட விநோதமான திருவிழாவின் வரலாறு மிகவும் பழமையானது. இது 8 ஆம் நுற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டதாகச் செவிவழிச்செய்தி. சம்ஹைன் எனக் கொண்டாடப்படும் கெல்டியத் திருவிழாவாகவும் மற்றும் புனித நாளான அனைத்துத் துறவியர் தினத்தின் முந்திய இரவு கொண்டாடப்படும் விழாவாகவும் உள்ளது. இது ஒரு மதச்சார்பற்ற விழாவாக அனைவராலும் கொண்டாடப்படுகிறது.

சில குறிப்புகள் இந்த கொண்டாட்டம், அறுவடை காலத்தின் இறுதியிலும், பனி காலம் மற்றும் குளிர்பருவத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் விழாவாகவும் உலகின் சில இடங்களில் இது கொண்டாடப்படுகிறது. இதை வெளிப்படுத்தும்

விதமாக பறங்கிக்காய் அல்லது பூசணியைச் செதுக்கி அதன் உள்ளே விளக்கு ஏற்றுவார்கள். ஆரஞ்சு மற்றும் கறுப்பு ஆகிய இரு வண்ணங்கள் இந்த கொண்டாட்டத்தில் தொடர்புடைய வண்ணங்களாய் உள்ளன.

இத்தனை பழமையான விழாவில் என்னைப் போன்ற குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தது மாறுவேடம் அணிந்து தோழர்களுடன் சேர்ந்து அண்டை வீடுகளுக்கு சென்று "சேட்டையா, மிட்டாயா" ,"குறும்பா, இனிப்பா" என்று நாங்கள் கேட்க, அவர்கள் எங்களுக்காக நாங்கள் மிகவும் விரும்பும் சுவைமிக்க இனிப்பு மிட்டாய்களை எங்கள் அனைவருக்கும் பகிர்ந்து வழங்குவார்கள். முகமூடி அணிந்து மிரட்டும் எங்களைப் பார்த்து பயந்தவர்கள் போலப் பெரியவர்கள் செய்யும் பாவனைகளைக் காண மிகவும் அருமையாக இருக்கும். இத்திருவிழா எங்களுக்குப் பேய்களின் மீதான பயத்தைப் போக்கி எங்களுக்கு இனிமையான(பயங்கரமான) நினைவுகளைத் தருகிறது.

நன்றி,

செல்வன் ஈஸ்வர்சாய்ஸ்ரீராம்

தரம் - 1

நவராத்திரி குறித்துக் கூறப்பட்டுவரும் புராணக் கதைச் சுருக்கம்

ரம்பன் என்ற அசுரன் கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்தான். அவன் தவத்தை மெச்சி அவன்முன் தோன்றினார் அக்னி பகவான். அவன் தனக்குச் சர்வ வல்லமை பொருந்திய மகன் வேண்டுமென வேண்டினான்.

அக்னி தேவன் “ரம்பன் நீ கேட்ட வரத்தை அளித்தேன். நீ முதலில் எந்தப் பெண்ணைக் கண்டு ஆசை கொள்கிறாயோ அவள் மூலம் உனக்கு மகன் பிறப்பான்” என்று கூறி மறைந்தார்.


மனம் முழுக்க உற்சாகத்துடன் வந்த ரம்பன், முதலிற் கண்டது காட்டெருமையை. அவனது அசுரபுத்தி வேலை செய்தது. காட்டெருமை மேற் காதல் கொண்டான். தானும் காட்டெருமையாக உருமாறினான். அசுரனின் வாரிசாக, மகிஷாசுரன் பிறந்தான்.

மகிஷாசுரன் 10 ஆயிரம் ஆண்டுகள் பிரம்மனைக் குறித்துத் தவமிருந்தான். “எனக்குத் தேவர்கள், அசுரர்கள், மானிடர்களால் மரணம் ஏற்படக்கூடாது. கன்னிப் பெண்ணால்தான் மரணம் ஏற்பட வேண்டும்” என்று வரம் கேட்டான். அவன் கேட்டவரத்தை அருளினார் பிரம்மதேவன். அங்கு தொடங்கியது பிரச்சனை. மகிஷாசுரனின் அராஜகம் அதிகமாகியது. மகாவிஷ்ணுவைத் தஞ்சமடைந்தனர் தேவர்கள். “மகிஷாசுரனுக்கு மரணம் பெண்ணால்தான். அவனை சம்ஹாரம் செய்யத்தகுந்தவள் மகாசக்தி மட்டும்தான்” என்று கூறினார் மகாவிஷ்ணு.

மும்மூர்த்திகளும், தேவர்களும் ஒன்று கூடிப் பிரார்த்தனை செய்ததும் ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களையும் பெற்ற மகாலட்சுமியாய்த் தோன்றிய அம்பாள் சர்வலங்கார பூஷிதையாய்ப் புறப்பட்டாள். அம்பாளுடன் கடும் போர் புரிந்தான் மகிஷாசுரன். கடும் போர் முடிவுக்கு வந்தது. அநீதி அழிக்கப்பட்டது. அழிந்தான் மகிஷாசுரன். அந்த வெற்றியே நவராத்திரி விழா.

வீட்டு வைத்தியத்தால் வெல்வோம்

மீண்டும் மிக வேகமாகப் பரவும் Corona நச்சுயிரியின் தாக்கத்திலிருந்து எம்மைக் காத்துக் கொள்ள, சுடுநீர் அல்லது சூடான பானம் அடிக்கடி அருந்துவது தொற்றுள்ள



தொண்டைப்பகுதியில் தங்கியுள்ள வைரஸ் கிருமிகளை அழிக்க உதவும் என்றாலும், நமது மூக்கின் மேல் உட்புறத்தில் ‘எலும்பின் உட்புழை’ அதாவது (Paranassl Sinus) சைனஸ் வளைவுக்குள் தங்கியள்ள வைரஸ் கிருமிகளை, நாம் அருந்தும் சூடான கஷாயநீரோ, சூடான பானங்களோ தொட முடியாது என்பதால், அவை அங்கு பல்கிப் பெருகி நாளடைவில் (4 முதல் 5 நாட்களுக்குப் பிறகு) நமது சுவாச அறைகளுக்குள் புகும் சாத்தியமதிகம். சுவாசம் தடைப்படும் போதுதான் நாம் வைத்தியரின் துணையை நாடுகிறோம். எனவே வருமுன் காக்கவேண்டுமெனில் அதற்கு ஒரேவழி நீராவி மூலம் வைரஸ் கிருமிகளை அழிக்கமுயல்வதே.

50°C இல், இந்த வைரஸ் செயலற்றது. இந்த வைரஸ் 60°C வெப்பநிலையில் பலவீனமாக உள்ளது எனினும் எந்த மனித நோயெதிர்ப்பு மண்டலத்தையும் எதிர்த்துப் போராட முடியும். 70 ° C இல் இந்த வைரஸ் முற்றிலும் அழிக்கப்படுகிறதென்பது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

மக்கள் நெருக்கமாய் நடமாடும் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று வருபவராயிருந்தால், ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது செய்யுங்கள்.

